பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 10 2023 6 45

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்றவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்துரையாடுகிறார்.
- சென்னை திருவொற்றியூரில் அமைக்கப்பட்டு வரும் சூறை மீன்பிடி துறைமுகம் டிசம்பர் மாதத்தில் பயன்பாட்டுக்கு திறக்கப்படும் என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. பர்ஷோத்தம் ரூபாலா கூறியுள்ளார்.
- பசுமை தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் மாநிலத்தில் இதுவரை 3 கோடியே 15 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- காவிரி உள்ளிட்ட தமிழகத்தின் வாழ்வாதார பிரச்சினைகளில் திமுக அரசு அக்கறையின்றி செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- தமிழகத்தில் 15 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள் -

<<<<>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்றவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்துரையாடுகிறார்.

இந்தப் போட்டியில் இதுவரை இல்லாத அளவிற்கு 107 பதக்கங்களை குவித்ததற்காக வீரர்கள் அனைவருக்கும் பிரதமர் பாராட்டு தெரிவிக்கவுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் தேசிய விளையாட்டு சம்மேளனங்களின் பிரதிநிதிகளும், ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சியாளர்களும், அலுவலர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை திருவொற்றியூரில் அமைக்கப்பட்டு வரும் சூரை மீன்பிடி துறைமுகம் டிசம்பர் மாதத்தில் பயன்பாட்டுக்கு திறக்கப்படும் என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. பர்ஷோத்தம் ரூபாலா கூறியுள்ளார்.

சாகர் பரிக்ரமா எனப்படும் கடலோர பயணத்தின் 9வது கட்ட நிறைவு நிகழ்ச்சி காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் நடைபெற்றது.

இதில் பங்கேற்று, மீனவர்களுக்கான கிசான் அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், சென்னை திருவொற்றியூரில் 210 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் சூரை மீன்பிடி துறைமுகத்திற்கான பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்துள்ளது என்றார்.

முன்னதாக இந்த கடலோரப் பயணத்தின் ஒரு பகுதியாக, மாமல்லபுரம் மீனவ கிராமங்களில், மீனவர்களோடு அவர் கலந்துரையாடினார்.

மீனவர்கள் நலனுக்காக மத்திய அரசு வழங்கும் நிதி, இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி பயனாளிகளுக்கு நேரடியாக சென்றடைவதாக திரு. பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்தார்.

<<<<>>>>

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் மாநிலத்தில் இதுவரை 3 கோடியே 15 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான பருவநிலை மாற்றம் குறித்த பயிற்சிப் பட்டறை சென்னையில் நடைபெற்றது.

இதனைத் தொடங்கி வைத்துப் பேசிய சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுப்பதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கூறினார்.

இதில் பங்கேற்றுப் பேசிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மெய்யநாதன், தமிழகத்தில் வனப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் 2031ஆம் ஆண்டுக்குள் 265 கோடி மரக்கன்றுகளை நட திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டில் மட்டும் 6 கோடியே 44 லட்சம் மரக்கன்றுகளை நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தொழிலாளர்கள் பாதுகாப்பு குறித்த நெறிமுறைகளை முறையாக கடைபிடிக்காத பட்டாசு ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை அமைச்சர்கள் திரு. சி.வி. கணேசன் மற்றும் திரு. சிவசங்கர் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. சி.வி. கணேசன், தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பணிபுரியும் இடங்களிலேயே பயிற்சிகள் வழங்கப்படும் என்றார்.

<<<<>>>>

சென்னையில் வரும் ஜனவரி மாதம் சர்வதேச மருத்துவ ஆராய்ச்சி கருத்தரங்கம் நடைபெறும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி நாள் விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், ஜனவரி மாதத்தில் 3 நாட்கள் மருத்துவ ஆராய்ச்சி கருத்தரங்கம் நடைபெறும் என்று கூறினார்.

இனிவரும் காலங்களில் செப்டம்பர் 26ஆம் தேதி பல்கலைக்கழக ஆராய்ச்சி தினமாக தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்றும் திரு. மா. சுப்பிரணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

காவிரி உள்ளிட்ட தமிழகத்தின் வாழ்வாதார பிரச்சினைகளில் திமுக அரசு அக்கறையின்றி செயல்படுவதாக மாநில பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சட்டப்பேரவையில் மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் என்ற பெயரில் திமுக அரசு நாடகத்தை நடத்தியிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

காவிரி நீரை திறந்துவிடாமல் உள்ள கர்நாடக காங்கிரஸ் அரசை கண்டித்து ஒருவார்த்தை கூட திமுக பேசவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அண்டை மாநிலங்களுடனான நதிநீர் பிரச்சினைகள் பெரும்பாலானவை திமுக ஆட்சிக் காலத்தில் உருவானவை என்று அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முயற்சியால் 2018ஆம் ஆண்டு காவிரி நதிநீர் ஆணையம் அமைக்கப்பட்டதாகவும், 5 ஆண்டுகளாக எந்தப் பிரச்சினையும் இன்றி தமிழகத்திற்கு தண்ணீர் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் தற்போது நீரை திறந்துவிடாமல் இருப்பதாக திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<>>>>

கோவை மாநகரில், பெண்கள் பாதுகாப்புக்கென மேற்கொள்ள வேண்டிய கூடுதல் நடவடிக்கைகள் குறித்து, அவர்களிடம் கருத்துக்கள் கோரப்படவுள்ளதாக காவல்துறை ஆணையர் திரு. வி. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை, நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி, நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை, திருப்பூர், தேனி ஆகிய 12 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 400 ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

கேமரூன் நாட்டில் ஏற்பட்ட மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

<<<<>>>>

மியான்மரின் தெற்குப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில் போக்குவரத்துகள் தடைபட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா - பெரு இடையே வர்த்தக ஒப்பந்தத்திற்கான சிறப்பு சுற்று பேச்சுவார்த்தைகள் இன்றும் நாளையும் காணொலி மூலம் நடைபெறவுள்ளது.

<<<<>>>>

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, புதுதில்லியில் குடியரசுத் துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரைச் சந்தித்து இந்தியா – இங்கிலாந்து உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தியது.

<<<<>>>>

தனியார் பண்பலை வானொலிகளுக்கான விளம்பரக் கட்டண விகிதங்களை ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் திருத்தி அமைத்துள்ளது.

<<<<>>>>

தூய்மை இந்தியா இயக்கத்தின் மூன்றாவது கட்ட சிறப்பு இயக்கத்தின் முதல் வாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மத்திய பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறித்து அதிக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்திய திட்ட அலுவலர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி வளர்மதி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் சார்பு ஆய்வாளர் பணிகளுக்கான உடல் திறன் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் கரூரில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த நபர்கள் இதில் பங்கேற்கலாம் என்றும் ஆட்சியர் திரு பிரபு சங்கர் கூறியுள்ளார்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை மாநில நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு கேஎன் நேரு தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டங்களில் இங்கிலாந்து – பங்களாதேஷையும், பாகிஸ்தான் - இலங்கையையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>